**சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, சென்னை.15**

**நாள் 13 -10–2022**

**மாசற்ற, மகிழ்ச்சியான தீபாவளியைக் கொண்டாட அன்பான வேண்டுகோள்!**

**தமிழ்த்திரு நாட்டு மக்கள் அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துகள்!**

புத்தாடை உடுத்தி ,ஒளித்தீபமேற்றி, இன்சுவை பலகாரங்களை உற்றார் உறவினர்களுடன் பகிர்ந்து உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்க இனிய தீபாவளிளைக் கொண்டாடும் வேளையில், மாசற்ற தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறையின் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தீபாவளி தினத்தில் பட்டாசு வெடிப்பது வழக்கமான ஒன்றாகும். பட்டாசு காற்றினை மாசுபடுத்து மட்டுமன்றி, ஒலிமாசுவையும் ஏற்படுத்தும். பட்டாசு வயது முதிர்ந்தவர்களுக்கும், குழந்தைகளுக்கும் உடல் நலம் குன்றியவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் பட்டாசுவால் ஏற்படும் சப்தம் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் தீமை விளைவிக்கும். பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் சப்தம் விலங்குகள், பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கும் நிரந்தர செவிட்டுத் தன்மையை ஏற்படுத்தக்கூடியதாகும்.

பட்டாசு வெடிப்பதால் காற்று மிகவும் மாசுபடுகிறது. தீபாவளிப் பண்டிகையின்போது அதிர்ச்சி அளிக்கும் வகையில் காற்று மாசுபடுகிறது. காற்று மாசுபடுதல் காரணமாக காலநிலை மாற்றத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டு மனித இனத்துக்கு மட்டுமல்லாமல், சுற்றுச்சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் காற்று மாசுவால் மனிதனின் நுரையீரல் பாதிப்படைந்து ஆஸ்துமா மற்றும் காச நோயாளிகளுக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே மாசுவை ஏற்படுத்தாத வகையில் கீழ்கண்ட வழிமுறைகளை பின்பற்றி தீபாவளிப் பண்டிகையை சிறப்பாக கொண்டாடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்யக்கூடியவை

- அதிகமாக சப்தம் மற்றும் புகை ஏற்படுத்தக்கூடிய பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்
- பட்டாசு வெடிக்கும் போது ஏற்படும் தீவிபத்துக்களைத் தவிர்க்க மணல் மற்றும் கோணிப்பைகளை பாதுகாப்புக் கருதி பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.
- உள்ளூர் நலசங்கங்கள் மூலம், மாவட்ட நிர்வாகம் /ஊராட்சி அமைப்புகளின் அனுமதியுடன் பொது இடத்தில் பட்டாசுகளை காலை 6.00 மணிமுதல் 7.00 மணிவரையிலும் மாலை 7.00 மணிமுதல் 8.00 மணி வரை பசுமைப் பட்டாசுகளை வெடிக்க வேண்டும்

செய்யக்கூடாதவை

- அதிகமாக ஒலியை எழுப்பும் கொத்துப் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்
- மருத்துவமனைகள், பள்ளிகள், நீதிமன்றங்கள் மற்றும் புனிதத் தலங்களின் அருகில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்கவேண்டும்,
- குடிசைப் பகுதி மற்றும் எளிதில் தீபற்றக்கூடிய பகுதிகளில் பட்டாசுகள் வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்

பட்டாசுகள் வெடிப்பது குறித்து அரசு வெளியிடும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி காற்று மற்றும் ஒலிமாசுவைக் மட்டுப்படுத்த ஒத்துழைப்பை நல்குவதோடு, தீபாவளிப் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் கோவிட் 19 தொடர்பாக அரசு வெளியிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இயக்குநர்
சுற்றுச்சூழல் மற்றும்
காலநிலைமாற்றத் துறை
சென்னை.15